**கவனிக்க** .- *2015.04.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1910 - 2015 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2015.04.10

*1910 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 706 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 712 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 718 |



### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## திருத்தம்

### கல்கமுவ பிரதேச சபை

ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெற்ற III ஆம் தரத்தில் சாரதிப் பதவிக்காக ஆட்சேர்ப்பு

*2015.03.13 ஆந் திகதிய 1906 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட இல. 03-422 ஐக் கொண்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | சாரதி | 1 | (பொ.நி.சு 06/2006 IV) PL - 3-2006A ரூ. 12,470-10×130-10×145-10×160- 12×170-ரூ. 18,860. | 1. க. பொ.த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாது ஆகக்குறைந்தது இரு பாடங் களுக்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற் குரிய பாடம் தவிர்த்து)<br>2. தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.<br>3. பொதியில்லாத எடை 34 அந்தருக்கு அதிக மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக்கூடிய பஸ்வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப் பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |

4-248/1

---

### கல்கமுவ பிரதேச சபை

வடமேல் மாகாண அரச சேவையின் கல்கமுவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத ஊழியர் தரம் III பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்காக இந்த அறிவித்தல் உரிய தகைமைகளைக் கொண்ட கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

(கல்கமுவ பிரதேச சபையில் தற்போது சேவையில் உள்ள நிரந்தர, அமய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சுயேச்சை ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | வெளிக்கள ஊழியர் | 1 | (06/2006 IV) PL - 3-2006A பிரகாரம் ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600. | க. பொ.த. (சா. தர) பரீட்சையில் குறைந்தது 02 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர) |

**2. தேவையான வேறு தகைமைகள்:**

(1) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்;

(2) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருந்தாது.);

(3) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(4) விண்ணப்பதாரர் நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்;

(5) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டவராகவோ, அரச, உள்ளூராட்சி/மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

**3. சேவைக்குச் சேர்த்துக் கொள்ளலும் விண்ணப்பித்தலும்.-**

(1) சேவை அவசியத்தைப் பொறுத்து உரிய முறையிலான நேர்முகப்பரீட்சை, செய்முறை பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்;

(2) தற்போது கல்கமுவ பிரதேச சபையில் குறிப்பிட்ட பதவிகளில் அமைய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சேவையில் உள்ள ஊழியர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்;

(3) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப்படிவத்தினை 2015.04.23 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்;

(4) விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்:-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்;
(2) கல்விச் சான்றிதழ்கள்;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு ;
(5) தொழில் சார் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

எ. பி. நிமல் ரத்னாயக,
செயலாளர்,
கல்கமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ,
2015, மார்ச்சு 27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண அரச சேவையில் கல்கமுவ பிரதேச சபையின் .................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. (i) விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களுக்கான பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. (i) பிறந்த திகதி :-
   வருடம் :----- மாதம் :---- திகதி :----.
   (ii) 2015.04.23 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் தன்மை :----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
7. தேசிய இனம் :----.
8. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவுக் காலம் :----.
9. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? இல்லையாயின் பதிவு செய்யப்பட்டதனாலா என்பது பற்றி ? :----.

10. கல்வித் தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-

(i) சித்தியெய்திய வருடம் /தரம் :-----. வருடம் :-----.

(ii) க. பொ. த. (சா/த.) பரீட்சை :

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க. பொ. த. (உ/த.) பரீட்சை

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. தொழில் தகைமை மற்றும் அனுபவம் :----.

12. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அந்த சேவை காலம் மற்றும் விபரம் :----.

13. நீங்கள் எப்போதாவது அல்லது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

14. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு ஆளாவேன் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
**(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)**

15. திரு./திருமதி/செல்வி ..................................................... இந்த நிறுவனத்தில் .................................. ஆக சேவையில் உள்ளார். இந்த பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் அவர் தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுக்கலாம்/விடுவிக்க முடியாது. அவர் எவ்வித தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை என்று சான்றுப்படுத்துவதுடன் அவரினால் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரையினை இடவும்)
திகதி :----.

4-248/2

## பண்டாரகமை பிரதேச சபை

மேல் மாகாண அரச சேவையில் உள்ள பதவிகள் வெற்றிடம்

மேல் மாகாணம், பண்டாரகமை பிரதேச சபையில் கீழே காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களாயுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்பொருட்டு தகைமைகளைக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 24.04.2015 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 'செயலாளர், பண்டாரகமை பிரதேச சபை, பாணந்துறை பண்டாரகமை' எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். பண்டாரகமை பிரதேச சபை அதிகார சபைக்குள் வசிப்பவர்கள் மற்றும் அப்பிரதேச சபையில் தற்போது அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வருமான வரி பரிசோதகர் தரம் III | எம்என் 1-2006 ரூபா 13,120-10X145-11X170-11X240-10X320-ரூபா 22,040 (ஆரம்ப நிலை) | 4 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்; அல்லது<br>க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக :**<br>க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் மொழி மற்றும் கணிதம் உட்பட ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (இதில் ஐந்து பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்); உரிய உள்ளூராட்சி நிறுவனமொன்றில் ஆரம்ப சேவை தரத்தில் சம்பளம் பெறுபவராகவும் நிரந்தர சேவையை உள்ளவராகவும் 5 வருடம் திருப்திகரமான சேவையை பூர்த்திசெய்தவராகவும் இருப்பதுடன் அக்காலப்பகுதியில் ஒழுக்காற்று தண்டனை பெற்றவராக இருத்தல் ஆகாது. |
| 2 | காவலாளி தரம் II | பீஎல் 1- 2006 ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160-ரூபா 17,600 (12 ஆம் படிநிலை) | 1 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது இரண்டு திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் |
| 3 | நகர மண்டப பொறுப்பாளர் | பீஎல் 1- 2006 ரூபா 12,210-10X130-10X145-10X160-12X170-ரூபா 18,600 (ஆரம்ப நிலை) | 1 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது இரண்டு திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் |

மேலே தரப்பட்ட அவ்வவ் பகுதிகளுக்குரிய தகைமைகளுக்கு மேலதிமாக கீழே தரப்பட்டுள்ள பொது தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:-

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் 3 வருட காலப்பகுதியில் மேல் மாகாண நிரந்தர வதிவாளர் என நிரூபித்தல் வேண்டும். (பண்டாரகமை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.) வாக்காளர் பட்டியலின் மூலம் அல்லது பிரதேச செயலாளர் சான்றுபடுத்திய கிராம அலுவலரின் சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும் ;

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 24.04.2015 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.(ஏலவே அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோருக்கு மேற்குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஏற்படைத்தாகாது.) ;

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iv) தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது ;

(v) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின்மூலமோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(vi) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு முன்னர் 5 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனை பெறாதவராகவும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும் ;

(vii) அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் விண்ணப்பிக்கும்போது, அரச சேவையிலிருந்து அல்லது மாகாண அரச சேவையிலிருந்து அல்லது அரச சட்டத்தின்கீழான சபைகள்/கூட்டுத்தாபனங்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**2. சேவை நியதிகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்;

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் மூன்று வருட தகுதிகாண் நிலைக்கு உட்படுவர்./ தரமுயர்த்தப்படுமாயின் ஒரு வருட பதிற் கடமையாற்றும் காலவெல்லைக்கு உட்படுவர்;

(iii) மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(iv) வருமான வரி பரிசோதகர் எழுத்துமூலப் பரீட்சைகளின் பெறுபேற்றுகளுக்கு அமைய ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்;

(v) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரச அல்லது மாகாண சபை அல்லது திணைக்கள கட்டளைகளுக்கும் காலத்திற்குக்காலம் விநியோகிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கும் நியமனம் பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.

**3. ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதம்:**

(i) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை பெபேறுகளின்மீது அல்லது செயன்முறை பரீட்சையின் திறமைகள்மீது தகைமைகள் பெறுவோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை அல்லாத பதவிகளுக்காக நேர்முகப்பரீட்சையின் மூலம் புள்ளிகள் மற்றும் தகைமைகள்மீது தகைமையுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**4. விண்ணப்பிக்கும் விதம்:**

(i) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ்;

(2) தேசிய ஆள் அடையாள அட்டை;

(3) ஆரம்ப கல்வித் தகைமைகள் நிரூபிக்கும் ஆவணங்கள்;

(4) தொழில்சார் அல்லது அனுபவம் நிரூபிக்கும் ஆவணங்கள்;

(5) தங்கள் வதிவை நிரூபிக்கும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.

(ii) ஆரம்ப தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் ;

(iii) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் பண்டாரகமை பிரதேச செயலாளருக்கே உரித்தானதாகும்;

(iv) வருமான வரி பரிசோதகர் பதவிக்காக எழுத்துமூல பரீட்சை பெறுபேறுக்கமைய முன்னுரிமைபெற்ற விண்ணப்பதாரர்களே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்படுவர்;

வருமானவரி பரிசோதகர் பதவிக்கான எழுத்துமூல பரீட்சை:

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக : (அ) விவேகம் மற்றும் புலமை பரீட்சை - 1 மணித்தியால வினாத்தாள்

(ஆ) பொது அறிவு - 01 மணித்தியால வினாத்தாள்

உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக : (அ) விவேகம் மற்றும் புலமை பரீட்சை - 1 மணித்தியால வினாத்தாள்

(ஆ) இத்துறைக்குரிய அறிவைப் பரீட்சிப்பதற்கான - 01 மணித்தியால வினாத்தாள்

(v) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை வர்த்தமானி அறிவித்தலில் குறித்துள்ளதுபோல் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் 04 ஆம் பந்தியின் I இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vi) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் சிபார்சுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். இறுதித் திகதியான 24.04.2015 இற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

என். டி. ஐ. சுவர்ணா கே. பெரேரா,
செயலாளர்,
பண்டாரகமை பிரதேச சபை.

பண்டாரகமை பிரதேச சபை,
பாணந்துறை வீதி,
பண்டாரகமை,
2015, மாச்சு 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பண்டாரகமை பிரதேச சபை**

................................................................................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. நிரந்தர விலாசம் :----.
4. தேசிய அடையாள அட்டை :----.
5. பிறந்த திகதி :
   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
6. விண்ணப்ப முடிவுத் திகதியான 24.04.2015 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
9. தேசிய இனம் :----.
10. பண்டாரகமை பிரதேச சபையில் தற்போது சேவையாற்றுகின்றீராயின்,
    வகிக்கும் பதவி :----, சேவைக் காலம் :----, அப்பதவி நிரந்தர/தற்காலிக/அமய/ ஒப்பந்தம் ஆகியன :----.
11. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரைமூலமாகவா? பதிவின்மூலமாகவா? :----.
12. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :----.
13. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பராயின், திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................................................ தற்போது இத்திணைகளத்தில்/நிறுவனத்தில் (நிரந்தர/அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் ....................திகதிமுதல் ................................... திகதி வரை .......................................... ஆக சேவையாற்றுகிறார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

-----,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :----.

4-296

---

**பொரலஸ்கமுவ நகர சபை**

2015.02.20 ஆந் திகதிய 1903 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் பக்கம் 476 இல் வெற்றிடம் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இல. 2-509, இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
பொரலஸ்கமுவ நகர சபை.

நகர சபை,
பொரலஸ்கமுவ,
2015, மாச்சு 31.

4-591

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பலப்பிட்டிய பிரதேச சபை**

(261 ஆம் அத்தியாயமாகிய) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி சபைகள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்காலச்) சட்டத்தின் 3 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பலப்பிடடிய பிரதேச சபையினால் 2014, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் போது கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இல. ஓ I, : 01 உடைய பிரேரணை அங்கீகரிக்கப்பட்டதாக பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

அலகியாஹந்தி தயாரத்ன த சில்வா,
தவிசாளர்,
பலப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பலப்பிட்டிய,
2015, சனவரி 30.

**அட்டவணை**

பிரேரணை இலக்கம் ஒ : I : 01

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆவது இலக்க உள்ளூராட்சி அலுவலக

*(அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம்) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவின்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாணத்தில் மாகாண சபையின் மாகாண நிர்வாக விடய பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 2013.05.17 ஆந் திகதிய 1811 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதுமான தென் மாகாணத்தின் தென் மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்டது என 2014.08.29 ஆந் திகதிய 1878 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்டதுமான அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டங்களின் 1 முதல் 29 வரையிலான பகுதிகள் இப் பிரேரணை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு மேற்கூறப்பட்ட உள்ளூராட்சி அலுவலகம் (அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலச் சட்டம்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் பலப்பிட்டிய பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.*

*4-229*

---

**பலப்பிட்டிய பிரதேச சபை**

*வீதிகளைப் பெயரிடும் அறிவித்தல்*

*பலப்பிட்டிய பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள வீதி, கீழே அட்டவணையில் உத்தேசிக்கப்பட்ட பெயரின் கீழ் பெயரிடுவதற்கான தீர்மானம், பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி அவ்வீதிகள் இனிமேல் உத்தேசிக்கப்பட்ட பெயர் கொண்டு அழைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகிறேன்.*

*ஏ. தயாரத்ன த சில்வா,*
*தவிசாளர்,*
*பலப்பிட்டிய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பலப்பிட்டிய,*
*2015, மாச்சு 17.*

**அட்டவணை**

| விபரம் | உத்தேசிக்கப்பட்ட பெயர் |
|---|---|
| 1. ரண்தொம்பே சங்கராஜ பன்சலைக்கு அருகாமையில் செல்லும் வீதி | சங்கராஜ வீதி |
| 2. ரண்தொம்பே வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஒலகம வீதியை சென்று அடையும் கனத்த வீதி | பூஜ்ஜிய தம்மதீர மாவத்தை |
| 3. கொஸ்கொடை ஹேகல்ல புகையிரத நிலைய பின்புற வீதியில், முதலாவது வலது பக்கம் திரும்பும் சமாதான நீதவான் திரு. சிசிர தாப்ரூவ் அவர்களின் வீட்டுக்கு அண்மையில் செல்லும் வீதி | தருண சேவா மாவத்தை |
| 4. வதுகெதர பெரேரா மரவாலைக்கு பின் பக்க வீதி | ஜயமக மாவத்தை |
| 5. பேரதுடுவ வீதி தொடக்கம் திரு. ஆர். எம். உபுலின் வீடுவரை உள்ள வீதி | ரம்முது ஹெததாச மாவத்தை |
| 6. பேரதுடுவ வீதி தொடக்கம் திரு. டபிள்யு. ஹேமசிரியின் வீடுவரை உள்ள வீதி | சிரி சுதர்சனாராம விஹார மாவத்தை |
| 7. பேரதுடுவ வீதி தொடக்கம் திரு. கே. எச். த சில்வாவின் வீடுவரை உள்ள வீதி | கே. எச். த சில்வா மாவத்தை |

*4-246*

---

**வரக்காபொல பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் 24 (3) ஆம் உப பிரிவின் படி கிராமிய வீதிகளின் பதிவினை பிரகடனப்படுத்தல்*

*கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் 24(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2013.07.12 ஆந திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு, குறித்த வீதிகள் சம்பந்தமாக ஏதேனும் எதிர்ப்புக்கள் அல்லது வழக்குகள் இதுவரை தாக்கல் செய்யப்படாததால்*

24 (3) உப பிரிவின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் வரக்காபொல பிரதேச சபைக்கு உரித்தான வீதிகள் என இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

கீர்த்திசிறி விஜேதுங்க,
தவிசாளர்,
வரக்காபொல பிரதேச சபை.

1. கிராம அலுவலர் பிரிவு : பின்னகொடகந்த
வீதியின் பெயர் : கஹடகஹமுலதெனிய வீதி
கிராமம் : லிணியகடுவ
பாதையின் நீளம் : 250 மீற்றர்
பாதையின் அகலம் : 2.4 மீற்றர்
ஆரம்பிக்கும் இடம் : நெழுந்தெனிய அளவ்வை வீதி லினியகடுவ மொரவக கிராம எல்லை

வீதியின் எல்லைகள் :

| இடது பக்கம் | வலது பக்கம் |
|---|---|
| எம். ஏ. காமினி திஸாநாயக | கே. கே. குணதாஸ |
| மாரகஹலந்தஹேன | கஹடகஹமுலதெனியகும்புர |

02. கிராம அலுவலர் பிரிவு : போபிடிய
வீதியின் பெயர் : கம்சபா வீதி
கிராமம் : பன்தெனிய
பாதையின் நீளம் : 2500 மீற்றர்
பாதையின் அகலம் : 2.4 மீற்றர்
ஆரம்பிக்கும் இடம் : பன்தெனிய கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திற்கு அருகிலிருந்து

வீதியின் எல்லைகள் :

| இடது பக்கம் | வலது பக்கம் |
|---|---|
| ஈ. ஏ. ஞானா ஏக்கநாயக்க உடஹவத்த | ஆர். எம். விஜேசுந்தர, ஜோன்லேகொவ |
| ஈ. ஏ. ஜயதிலக்க உடஹவத்த | எச். எம். பொடிமெணிகே, கடேவத்த |
| ஈ. ஏ. துஸானி ஏக்கநாயக்க உடஹவத்த | எச். எம். சரத்சந்திரபால, கடேவத்த |
| ஜி. ஜி. அனுலாவதீ, கொல்லகொடுவவத்த | எச். எம். ஷாந்த உதயகுமார, கடேவத்த |
| கே. எம். ரஞ்சித் ரணவக, எகொடவத்த | ஜீ. ஜீ. பிரேமவதீ, கோன்கஹமுலஹேன |
| | கே. எம். வசன்த, எகொடவத்த |
| | பீ. ஜீ. முணிதாஸ, கோன்கஹமுலஹேன |
| | கே. எம். ரத்னபால, கெபலவத்த |
| | கே. எம். பியசேன, மஹகெதரவத்த |
| | எச். எம். நந்தசேன, பல்லேஹாவத்த |
| | கே. எம். சிறிவர்தன, மஹகெதரவத்த |

03. கிராம அலுவலர் பிரிவு : வேரகொட
வீதியின் பெயர் : கலபொடஹேன வீதி
கிராமம் : பஹலகம
பாதையின் நீளம் : 450 மீற்றர்
பாதையின் அகலம் : 1.8 மீற்றர்
ஆரம்பிக்கும் இடம் : வயல்வெளி

வீதியின் எல்லைகள் :

| இடது பக்கம் | வலது பக்கம் |
|---|---|
| ஜீ. சேதிரிஸ் - தலவத்தே எல | ஆர். டி. குருரத்தின - தலவத்தே எல |
| ஜீ. அஜித் சமரகோன் - தலவத்தே எல | ஆர். டி. மங்கலசேன - தலவத்தே எல |
| ஆர். எம். நிமல் பிரேமதிலக - தலவத்தே எல | ஜீ. சேதிரிஸ் - கலபொடஹேன |
| ஆர். எம். குசுமாவதீ - கலபொடஹேன | ஆர். எம். பிரேமவதீ - கலபொடஹேன |
| ஜீ. தியோனிஸ் - கலபொடஹேன | ஜீ. தியோனிஸ் - கலபொடஹேன |

| | | |
|---|---|---|
| 04. கிராம அலுவலர் பிரிவு | : | உடுவக |
| வீதியின் பெயர் | : | தங்கஸ்மடித்தேயிலிருந்து பலிகல கந்தஹேன அலவல ஜனவசம வரையிலான வீதி |
| கிராமம் | : | உடுவக |
| பாதையின் நீளம் | : | 2500 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 4 மீற்றர் |
| ஆரம்பிக்கும் இடம் | : | அல்கமவிலிருந்து கலபிடமட வரையில் உள்ள பிரதான வீதியில் அல்கமவிலிருந்து ஏறக்குறைய 3.5 கி. மீற்றர் தூரத்தில் |

வீதியின் எல்லைகள் :

| இடது பக்கம் | வலது பக்கம் |
|---|---|
| எஸ். ஏ. சுபா வீரசிங்ஹ, தங்கஸ்மடித்தஹேன | எஸ். ஏ. சுபா வீரசிங்ஹ, தங்கஸ்மடித்தஹேன |
| ஏ. ஏ. ஹேமசிறி, பஹல புரணவத்த | ஏ. ஏ. ஜயவர்தன, பஹல புரணவத்த |
| எச். ஏ. விக்கிரமசிங்ஹ, பஹல புரணவத்த | எச். ஏ. விக்கிரமசிங்ஹ, பஹல புரணவத்த |
| ஏ. ஏ. எலிஸ் நோநா, கல்அஸ்ஸே ஹேன்யாய | ஏ. ஏ. எலிஸ் நோநா, கல்அஸ்ஸே, ஹேன்யாய |
| ஏ. ஏ. சரத் ஜயமான்ன, கல்அஸ்ஸே, ஹேன்யாய | ஏ. ஏ. சரத் ஜயமான்ன, கல்அஸ்ஸே, ஹேன்யாய |
| டப்ளியு. ஜீ. லலிதா, வேவெல்தெனிய, ஹேன்யாய | டப்ளியு. ஜீ. லலிதா, வேவெல்தெனிய, ஹேன்யாய |
| என். ஏ. புஞ்சி பண்டா, வேவெல்தெனிய, ஹேன்யாய | ஏ. ஏ. சேனாரத்தின, வெளிகும்புரஹேன |
| ஏ. யூ. பப்லிஸ் சிஞ்சோ, வேவெல்தெனிய, ஹேன்யாய | ஏ. ஏ. மகிலிஸ் சிஞ்ஞோ, கெடுமகஹஹேன |
| ஏ. ஏ. சேனாரத்தின வெலிகும்புரஹேன | |
| டீ. ஆர். அபேசிங்ஹ கேடுமஹஹேன | டப்ளியு. எம். தர்மசேன, கெடுமஹஹேன |

4-247

---

## அரணாயக பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கமைய சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தின் அரணாயக பிரதேச சபையினால் எழுத்து வடிவில் காட்டப்பட்டுள்ள பாதைகள் அரனாயக பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் என இத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் தொடர்பாக குறிப்பிட்ட காணி உரிமையாளர்களால் யாதாயினும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

ஆர். தினேஷ் குணரத்ன,
தவிசாளர்,
அரணாயக பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக,
2015, மாச்சு 24.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தல்கஸ்பிட்டிய பெம்மே கடே அருகிலிருந்து பள்ளிவாயல் வீதி வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | தல்கஸ்பிட்டிய பெம்மே கடே அருகிலிருந்து பள்ளிவாயல் வீதி வரை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 44 C - தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமம் |
| பாதையின் நீளம் | : | 455 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி எம். எஸ். உம்மு ரஹீமா | ஒஹல உடுதெனின கும்புர காணி |
| 2. திரு. எம். ஐ. ஏ. சத்தார் | அம்பாயஹேன காணி |
| 3. திரு. எம். ஐ. எம். இக்பால் | அம்பாயஹேன காணி |
| 4. திரு. எம். ஆர். ஷிபாயா | அம்பாயஹேன காணி |
| 5. திரு. எம். ஆர். எம். நியாஸ் | அம்பாயஹேன காணி |
| 6. திருமதி எம். ஆர். ஹைருநிஸா | அம்பாயஹேன காணி |
| 7. திருமதி எம். எஸ். உம்மு நிஸா | ஒஹல உடுதெனின கும்புர காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. கலீல் | பஹல உடுதெனின கும்புர காணி |
| 2. திரு. எம். எஸ். எம். ஹனீபா | பஹல உடுதெனின கும்புர காணி |
| 3. திரு. எம். எஸ். கே. ரஹ்மான் | பஹல உடுதெனின கும்புர காணி |
| 4. திரு. எம். எல். எம். நூர்தீன் | மெத உடுதெனின கும்புர காணி |
| 5. திருமதி யு. எல். எம். பரீன் | மெத உடுதெனின கும்புர காணி |
| 6. திரு. ஏ. எல். ஏ. சமுது | மெத உடுதெனின கும்புர காணி |
| 7. திருமதி ஏ. எல். ஷஹருவான் பீபீ | மெத உடுதெனின கும்புர காணி |
| 8. திருமதி ஏ. எல். சித்தி நைமா | மெத உடுதெனின கும்புர காணி |
| 9. திரு. எம். எஸ். ஸத்தார் | மெத உடுதெனின கும்புர காணி |
| 10. திரு. எம். எச். எம். முனாஸ் | அம்பாயஹேன காணி |
| 11. திருமதி எம். ஜே. எப். ரிஸானா | அம்பாயஹேன காணி |
| 12. திரு. எம். எஸ். அன்ஸார் | அம்பாயஹேன காணி |
| 13. திரு. ஏ. ஆர். எல். எம். ராசிக் | கிரிபெல்கட ஹேன காணி |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.01.09 ஆந் திகதிய 56/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | திப்பிட்டிய – ஹெம்மாதகமை பாதையில் தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமத்தின் மதகிற்கு (போக்கு) அருகில் இருந்து தொலகந்தஹேன வத்தை வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | தல்கஸ்பிட்டிய ஹெம்மாதகமை பாதையில் முஸ்லிம் கிராமத்தின் மதகிற்கு (போக்கு) அருகில் இருந்து தொலகந்தஹேன வத்தை வரை |
| கிராம அலுவலர்ப் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 44 சீ – தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமம் |
| பாதையின் நீளம் | : | 450 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. எம். ஜே. எம். சியாவுதீன் | பணு அம்பகஹமுலஹேன காணி |
| 2. திரு. எம். ஜே. எம். சியாவுதீன் | கல்வெல துரயலாகே வத்தை காணி |
| 3. திரு. எம். எஸ். எம். நிஸார் | கல்வெல துரயலாகே வத்தை காணி |
| 4. திரு. எம். ஜே. எம். சியாவுதீன் | தெல்கந்தமுல ஹேன காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. எம். எஸ். எம். அன்சார் | தெல்கந்தமுல ஹேன காணி |
| 2. திரு. எம். எஸ். எம். ஹனீபா | பஹல உடுதெனின கும்புர காணி |
| 3. திரு. எம். ஜே. எம். சியாவுதீன் | தெல்கந்தமுல ஹேன காணி |
| 4. திருமதி ஏ. டபிள்யூ. ஹைருல் ஜசீமா | தெல்கந்தமுல ஹேன காணி |
| 5. திரு. எம். எஸ். எம். பயிஸல் | தெல்கந்தமுல ஹேன காணி |
| 6. திரு. எம். டீ. எம். மதுஹர் | தெல்கந்தமுல ஹேன காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.01.07 ஆந் திகதிய 24/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்ட சில்வாபுர பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | வெலிகும்புர தெலஹிட்டியாவை பிரதான வீதியில் இருந்து காணித்துண்டு இல. 10 காணி வரை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 47 சீ மோராகம்மனை |
| பாதையின் நீளம் | : | 198 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி கே. பீ. செலெலு | தெலஹிட்டியாவை குடியேற்றம் |
| 2. திரு. பீ. பீ. சமன் பிரியந்த ஜினசேன | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 3. திருமதி ஜீ. டி. ஐரங்கனி | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 4. திருமதி டபிள்யூ. எம். நந்தாவதி | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஜீ. டி. அநுர ஷாந்த | பரலேதெனிய காணி |
| 2. திரு. ஜீ. டி. பிரசாத் | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 3. திருமதி ஜீ. டி. பிரியங்கா சஞ்சீவனி | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 4. திருமதி டபிள்யூ. ஜீ. சிரியானி சந்திரலதா | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 5. திரு. பி. ஜி. சைமன் | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 6. திரு. ஜீ. டி. சுதத் ரோஹன | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 7. திருமதி யு. ஜீ. மாலனி | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |
| 8. திரு. கே. எம். எம். நிஷாந்த சில்வா | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்டக் காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.01.07 ஆந் திகதி கொண்ட 28/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | உடகமை அகலகொட்டுவை பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அரநாயக்க உடகமை பாதையில் எலிக்லேன்ட் தோட்டத்திலிருந்து அகல கொட்டுவை வயல் ஓடை வரை |
| கிராம அலுவலர்ப் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 43 E, உடகமை |
| பாதையின் நீளம் | : | 560 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. யூ. ஜீ. கே. ரணசிங்ஹ | எலிக்லேன்ட் தோட்டக் காணி |
| 2. திரு. யூ. எல். கபில குமார | எலிக்லேன்ட் தோட்டக் காணி |
| 3. திரு. அநுர இலங்கரத்ன | எலிக்லேன்ட் தோட்டக் காணி |
| 4. திரு. ஜீ. கே. ரோஹன | எலிக்லேன்ட் தோட்டக் காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. யூ. ஜீ. கே. ரணசிங்ஹ | எலிக்லேன்ட் தோட்டக் காணி |
| 2. திரு. ஈ. டபிள்யூ. ரணதேவ | உடதெனிய தோட்டக் காணி |
| 3. திரு. ஜீ. கே. ப்ரேமதிலக | அகல கொட்டுவைக் காணி |
| 4. திருமதி வீ. டீ. வாசனா | அகல கொட்டுவைக் காணி |
| 5. திரு. ஈ. டபிள்யூ. சுனில் ப்ரேமதிலக | அகல கொட்டுவைக் காணி |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2014.12.10 ஆந் திகதிய 354/2014 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கெஹெல்வத்தை பெலிகஸ்வத்தை பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | மொரொன்தொட்டை கெஹெல்வத்தை பாதையில் இருந்து இஹல வத்தை காணி வரை |
| கிராம அலுவலர்ப் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 48, கெஹெல்வத்தை |
| பாதையின் நீளம் | : | 165 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி டபிள்யூ. புஞ்சி நோனா | கோவிலவத்தை எனும் பெலிகஸ்வத்தை காணி |
| 2. திரு. எம். ஆர். புஞ்சி மஹத்தயா | கோவிலவத்தை எனும் பெலிகஸ்வத்தை காணி |
| 3. திரு. எம். பீ. சூரசேன | இஹலவத்தை காணி |
| 4. திரு. எம். பீ. சோமரத்ன | இஹலவத்தை காணி |
| 5. திரு. எம். பீ. ரசிக | இஹலவத்தை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி டபிள்யூ. புஞ்சி நோனா | கோவிலவத்தை எனும் பெலிகஸ்வத்தை காணி |
| 2. திரு. எம். ஆர். புஞ்சி மஹத்தயா | கோவிலவத்தை எனும் பெலிகஸ்வத்தை காணி |
| 3. திரு. எம். பீ. சூரசேன | இஹலவத்தை காணி |
| 4. திரு. எம். பீ. சோமரத்ன | இஹலவத்தை காணி |
| 5. திரு. ஜீ. கே. கருணாதிஸ்ஸ | இஹலவத்தை காணி |
| 6. திரு. எம். பீ. சோமரத்ன | இஹலவத்தை காணி |
| 7. திரு. என். உதய குமார | இஹலவத்தை காணி |

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.01.07 ஆந் திகதி கொண்ட 27/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.

4-366

# நானாவித அறிவித்தல்கள்

## பண்டாரவளை மாநகர சபை

வியாபாரம் மற்றும் தொழில் சம்பந்தமான வரி அறவிடல் - 2015

1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) இல. 247 (இ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2015.03.17 ஆந் திகதி நிதி செயற்குழு தீர்மானத்தின் இலக்கம் 1-7 ஆம் இலக்கத்தின் படி 2015.03.20 ஆந் திகதிய விஷேட சபையின் தீர்மானத்தின் இலக்கம் 4(1) இன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்ட வாறு வியாபாரத்திற்காக 3,000 ரூபாவை வரியாக 2015 ஆம் ஆண்டிற்கு அறவிடுவதற்கு பண்டாரவளை மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

2. மேலும் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் அனைவரினாலும் குறித்த இவ் வரியை 2015 ஆம் ஆண்டிற்காக பண்டாரவளை மாநகர சபைக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

டீ. எம். என். திசாநாயக்க,
ஆணையாளர்,
பண்டாரவளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2015, மார்ச்சு 26.

**அட்டவணை**

**வர்த்தக வியாபாரம்**

1. பண்டாரவளை மாநகர சபை எல்லைக்குள் சிறிய லொறிகளின் மூலம் மணல் போக்குவரத்தை மேற்கொள்ளல்.

4-414

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.